செய்தி வெளியீடு எண். 185 நாள்: 07.04.2018

## <u>வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படுகிறது - மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி.,இ.ஆ.ப., அவர்கள் தகவல்</u>

வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை வழங்கும் திட்டம் தமிழ்நாடு அரசினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. படித்துவிட்டு வேலைவாய்ப்பு வேண்டி வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து 5 வருடம் மற்றும் அதற்கு மேலும் காத்திருக்கும் இளைஞர்களுக்கு, 1) பத்தாம் வகுப்பு தேர்வில் தேர்ச்சி பெறாத பதிவுதாரர்களுக்கு மாதம்தோறும் ரூ.200/- உதவித்தொகையும், 2) பத்தாம் வகுப்பு தேர்வில் தேர்ச்சியடைந்தவர்களுக்கு மாதந்தோறும் ரூ.300/- உதவித்தொகையும், 3) பன்னிரெண்டாம் வகுப்பு / தொழிற்கல்வி பட்டயப்படிப்பு தேர்வில் தேர்ச்சி அடைந்தவர்களுக்கு மாதம் ரூ.400/- உதவித்தொகையும் மற்றும் 4) பட்டப்படிப்பு தேர்வில் தேர்ச்சியடைந்தவர்களுக்கு மாதம் ரூ.600/- உதவித்தொகையும் வழங்கப்படுகிறது.

**மேற்கூறிய உதவித்தொகை பெறுவதற்கு:**

1) வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து தொடர்ந்து பதிவினை புதுப்பித்து 5 வருடங்கள் காத்திருக்க வேண்டும், 2) பொதுப்பிரிவினருக்கு வயது வரம்பு 40-ம் தாழ்த்தப்பட்ட / பழங்குடியினருக்கு வயது 45-க்குள் இருக்கவேண்டும், 3) கல்வி நிறுவனத்தில் தினசரி சென்று பயிலுபவராக இருக்கக்கூடாது மற்றும் 4) பெற்றோர்கள் ஆண்டு வருமானம் ரூ 50,000/-க்குள் இருக்க வேண்டும்.

மேற்கூறியவாறு தகுதியும், உதவித்தொகை பெற விருப்பமும் உள்ளவர்கள் 30.04.2018-க்குள் திருவள்ளூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு, வேலைவாய்ப்பு அலுவலக அடையாள அட்டை மற்றும் அனைத்து அசல் கல்விச் சான்றிதழ்களுடன் நேரில் வந்து விண்ணப்பப் படிவம் பெற்றுக்கொள்ளலாம்.

**மாற்றுத் திறனாளிகளுக்கு இந்த உதவித் தொகை திட்டத்தின்படி:**

1) எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி மற்றும் அதற்கு குறைவான கல்வித் தகுதியுடையவர்களுக்கு மாதம் ரூ.600/-ம், 2) 12-ஆம் வகுப்பு / தொழிற்கல்வி பட்டயப் படிப்பில் தேர்ச்சி அடைந்தவர்களுக்கு மாதம் ரூ.750/-ம், 3) பட்டப்படிப்பு முடித்தவர்களுக்கு மாதம் ரூ.1,000/-ம் வழங்கப்பட்டு வருகிறது. மாற்றுத்திறனாளிகளை பொருத்தவரையில் உச்ச வயது வரம்பு ஏதுமில்லை.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**